சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.292/2025

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18–ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889 ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44 வது பிரிவு 5 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – செல்வக்குமார் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதிகள் தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 31.10.2014 ம் தேதியிட்ட தாவாச் சொத்துக்கு முத்துப்பேச்சி பெயரில் உள்ள 434 நிர் பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.1** . 06.01.1986 ம் தேதியிட்ட முத்துப்பேச்சி எழுதி வைத்த உயில் சாசனம் அசல் **வா.சா.ஆ 2**. முத்துப்பேச்சி அவர்களின் இறப்புச் சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ 3**. 08.08.2013 – 23.07.2014 தாவாச் சொத்துக்குரிய 434 நிர் பட்டாவுக்கு 1423, 1424 ம் பசலிகளுக்கு முத்துப்பேச்சி பெயரில் உள்ள வாதிகள் செலுத்திய வரி ரசீதுகள் (எண்ணம் 2) அசல் **வா.சா.ஆ 4**. 07.05.2016 – 26.08.2025 தாவாச் சொத்துக்குரிய 672 நிர் பட்டாவுக்கு 1425, 1435 ம் பசலிகளுக்கு 1ம் வாதி தேவி பெயரில் வாதிகள் செலுத்திய வரி ரசீதுகள் (எண்ணம் 2) அசல் **வா.சா.ஆ 5**. 01.07.2004 ம் தேதியிட்ட செல்லப்பன் இறப்புச் சான்றிதழ் சான்றொப்பமிட்ட நகல் **வா.சா.ஆ 6**. 02.07.2004 ம் தேதியிட்ட

செல்லப்பனின் வாரிசு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ 7**. 06.08.2013 ம் தேதியிட்ட 2, 3 பிரதிவாதிககளுக்கு 1ம் பிரதிவாதி எழுதி வைத்த இனாம்செட்டில்மெண்ட் SRO நகல் **வா.சா.ஆ 8**. 21.01.2014 ம் தேதியிட்ட 2, 3 பிரதிவதிகள் பெயருக்கு பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல் **வா.சா.ஆ 9**. 29.09.2014 ம் தேதியிட்ட ஆதி சுவான்தாரர் முத்துப்பேச்சி பெயருக்கு மீண்டும் மாற்றப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல் **வா.சா.ஆ 10**. 18.11.2014 ம் தேதியிட்ட 1ம் வாதி பெயருக்கு பட்டா மாறுதல் உத்தரவு கணினி நகல் **வா.சா.ஆ 11**. தாவாச் சொத்துக்கான அரசு மதிப்பீட்டு வழிகாட்டி கணினி நகல் **வா.சா.ஆ 12**. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை :** இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.